## வாங்குவது மற்றும் விற்பனையின் மூலம் ஏற்படும் ஒரு வெற்றிகரமான அனுபவம்



**ச.மதுபாலன்,**
**எண் 53இ, மெயின் வீதி,**
**காந்தி சந்தை, திருச்சி - 8**
**அலைபேசி: 9443591123.**

---

**என்னைப்பற்றி அறிமுகம்:**

எனது பெயர் ச.மதுபாலன். நான் உருளை மற்றும் வெங்காயம் போன்ற காய்கறிகளை கடந்த ஐந்தாவது வருடங்களாக மொத்தம் மற்றும் சில்லறை விற்பனை செய்து வருகிறேன். ஆரம்ப காலங்களில் நான் உருளையை கொடைக்கானலிலும், வெங்காயத்தை பல்லடம் மற்றும் பெங்களூரிலும் வாங்கி திருச்சியிலும் அதன் அருகாமையிலுள்ள சந்தைகளுக்கும் விற்று வந்தேன்.

**சந்தை நிலவரம்:**

நான் வேறு ஊர்களின் உருளை மற்றும் வெங்காய விலைகளை செய்தித்தாள்களைப் பார்த்து அறிவேன். ஆனால் அது எனக்கு திருப்திகரமானதாக இல்லை. முதன்முதலில் என்னிடம் வேறு ஊர்களின் உருளை மற்றும் வெங்காயம் போன்றவற்றை விலை நிலவரங்கள் இல்லை. ஆனால் www.indg.in என்ற இணையதளத்தைப் பார்த்து கும்பகோணம், பெங்களூர், மேட்டுப்பாளையம் மற்றும் கோயமுத்தூர் போன்ற ஊர்களின் விலை நிலவரங்களை அறிய முடிந்தது. இது எனக்கு ஒரு பேருதவியாக அமைந்தது.

உருளை மற்றும் வெங்காயத்தை திருச்சி சந்தையில் மட்டுமே விற்று நான் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் வழங்கும் தினசரி சந்தை நிலவரங்களைப் பார்த்து அதே வகைகளை கும்பகோணம் மற்றும் அதன் அருகாமையிலுள்ள சந்தைகளுக்கு விற்று லாபம் அடைந்தேன.

**அதற்குரிய ஒரு உதாரணத்தைக் கீழே குறிப்பிட்டுள்ளேன்:**

- உருளை வகையின் அனைத்து வகைகளையும் ஒரு நாள் முழுதும் வாங்கியது 150 கிலோ / ஒரு நாள்
- வெங்காயம் வகையின் அனைத்து வகைகளையும் ஒரு நாள் முழுதும் வாங்கியது 220 கிலோ / ஒரு நாள்

| காய்கறி | விற்பனை இடம் | லாபம் ஒரு கிலோவுக்கு (ரூபாய்) |
|---|---|---|
| உருளை | திருச்சி சந்தை மற்றும் அருகில் உள்ளவை | 3.00 ரூபாய் |
| உருளை | கும்பகோணம் மற்றும் அருகில் உள்ளவை | 2.50 ரூபாய் |
| வெங்காயம் | திருச்சி சந்தை மற்றும் அருகில் உள்ளவை | 2.00 ரூபாய் |
| வெங்காயம் | கும்பகோணம் மற்றும் அருகில் உள்ளவை | 2.00 ரூபாய் |

இதில் கவனிக்க வேண்டியது என்னவென்றால் உருளை மற்றும் வெங்காயத்தை. கும்பகோணம் சந்தையில் விற்பதன் மூலம் கூடுதலாக ரூபாய் 4.50 மட்டுமே லாபம் கிடைக்கிறது. அதே வேலை திருச்சியிலும் எனக்கு 5.00 ரூபாய் கிலோவுக்கு லாபமாகக் கிடைக்கிறது. இந்த கூடுதல் வியாபாரத்தினால் எனக்கு முன்பை விட லாபம் அதிகமாகக் கிடைக்கிறது. இது தினசரி சந்தை நிலவரத்தின் மூலம் மட்டுமே முடிகிறது.

**எதிர் கால குறிக்கோள்:**

நான் என்னுடைய வியாபாரத்தையும், காய்கறி மற்றும் சந்தைகளையும் அதிகரிக்க எண்ணியுள்ளேன். இதன் அனைத்து பெருமைகளும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் மற்றும் தினசரி சந்தை நிலவரங்களையே சாரும்.

சில்லறை வியாபாரிகள் மற்றும் மொத்த வியாபாரிகள் இந்த இணையத்தளத்தைப் பார்த்து தமிழ்நாட்டில் உள்ள அனைத்து ஊர்களும் பயனடைகின்றனர். என்னைப் போன்ற பல சில்லறை வியாபாரிகள் இந்த இணையதளத்தின் சந்தை நிலவரங்களைக் கண்டு மிகவும் பயனடைகின்றனர். இந்த தினசரி சந்தை நிலத்தை வழங்குபவர்கள் மிகவும் சிறப்பான பணியைச் செய்து வருகின்றனர்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்துக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.